www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 10

X | 1 | 0 | 1 | X | X

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு– 2024

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

## தமிழ்

பகுதி – I

I. பொருத்தமான விடையைக் குறியீட்டுடன் எழுதுக. 7X1=7

1. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது -----------
   (அ) வீட்டைத் துடைப்பதை (ஆ) காலம் மாறுவதை
   (இ) வண்ணம் பூசுவதை (ஈ) இடையறாது அறப்பணி செய்வதை
2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது
   (அ) திருக்குறள் (ஆ) புறநானூறு (இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்
3. 'கானடை' – என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்காதது
   (அ) கான் + அடை (ஆ) கால் + நடை (இ) கால் + உடை (ஈ) கான் + நடை
4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடக் காரணம்
   (அ) வலிமையை நிலைநாட்டல் (ஆ) நாட்டைக் கைப்பற்றல்
   (இ) ஆநிரை கவர்தல் (ஈ) கோட்டையை முற்றுகையிடல்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (5,6,7) விடையளி

*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானும் அறிந்தவை அறிக!*
*செல்வர்தம் கையில் சிறைப்பட மாட்டேன்;*
*பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!*

5. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   அ) இளங்கோவடிகள் ஆ) தி.சொ. வேணுகோபாலன்
   இ) கண்ணதாசன் ஈ) கு.ப. ராசகோபாலன்
6. 'பதவி வாள்' என்பதன் இலக்கணக்குறிப்பு
   அ) உவமை ஆ) வினைத்தொகை இ) உருவகம் ஈ) வினையெச்சம்
7. இப்பாடலில் அமைந்த சீர்மோனை
   அ) ஆக்கல் – அவனும் ஆ) ஆக்கல் – செல்வர்
   இ) அவனும் – அறிந்தவை ஈ) அவனும் – யானும்

பகுதி – II பிரிவு – அ

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5x2=10

8. அவையம் – குறிப்பு வரைக.
9. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
10. ' மயங்கிய ' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
11. கலைச்சொல் தருக.
    அ) Patent ஆ) Belief
12. மரபுத் தொடரின் பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
    அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப்போடுதல்
13. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.
    "நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதுத்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது". "அங்ஙனக்குள்ளயே டீ சாப்பிட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு.. நா வெரசா வந்துருவேன்"
14. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

பகுதி – III பிரிவு – அ

III. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1x3=3

15. 'மாலவன் குன்றம் போனாலென்ன வேலவன் குன்றமாவது வேண்டும்' – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
16. உரைப்பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.
    (வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது ஒரு மனிதன் அவனுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.) அதாவது தன் மகிழ்ச்சியை



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மறப்பதுதான் மகிழ்ச்சி. கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது பழந்தமிழரின் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது, தயங்காது கொடுத்தாலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும். நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.

அ) உண்மையான மகிழ்ச்சி என்பது யாது?

ஆ) கொடையின் பெருமைகளாகப் பேசப்படுபவன எவை?

இ) தமிழர்களால் விரும்பப்பட்ட இரு கூறுகள் எவை?

பகுதி – III பிரிவு – ஆ

IV. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1x3=3

17. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்ந்ததாக கு.ப.ரா கவிபாடுகிறார்?

18. 'மாற்றம் எனது மானுடத் தத்துவம்' எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு – இ

ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1x3=3

19. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான் – இந்நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

20. *தேவர் அனையர் கயவர் அவரும்தாம்*
*மேவன தெய்தொழுக லான்* – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x4=12

21. அ) உம் ஊரில் பழுதடைந்துள்ள சாலைகள் குறித்தும் அதனால் ஏற்படும் இன்னல்கள் குறித்தும் எழுதி ஆவண செய்யுமாறு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கடிதம் எழுது.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

22. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



23. அ) மொழியாக்கம் செய்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight,seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

(அல்லது)

ஆ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் குறித்து எழுதுக.

பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2x6=12

24. அ) சங்க இலக்கியங்கள் கூறும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடு ஒப்பிட்டு எழுதுக.

25. அ) சாலை விதிகளை மதிப்போம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(முன்னுரை – சாலை விதிகள் – எச்சரிக்கை விளக்குகள் – ஓட்டுநர் உரிமம் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விதிகளை மதிப்போம்! விபத்தினைத் தடுப்போம்! – முடிவுரை)

(அல்லது)

ஆ) 'இராமானுஜர்' நாடகத்தின் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com